123/2003 அரிட்டாபட்டி பக்கம். 202



75/2003 கருங்காலக்குடி பக்கம். 123




76/2003 கருங்காலக்குடி பக்கம். 124



சுந்தரநாயினார்




ஸ்ரீ கட்டி
118/2003 கீழவளவு பக்கம். 196




புகழ்துணை நாயனார்



ஸ்ரீ காளந் அரட்டி
118/2003 கீழவளவு பக்கம். 196




காரைக்காலம்மை
21/2003 திருவாதவூர் பக்கம். 42, 43



பளனியாண்டி பண்டாரம் – திருவாதவூர்



159/2003 யானைமலை பக்கம். 254




60/2003 திருவாதவூர் பக்கம். 100




68/2003 அருவிமலை பக்கம். 113



70/2003 கருங்காலக்குடி பக்கம். 125




64/2003 அருவிமலை பக்கம். 103



64/2003 அருவிமலை பக்கம். 103



தருக்காக்குடி



73/2003 தருக்காக்குடி பக்கம் 121




126/2003 பொய்க்கரைப்பட்டி
பக்கம் 206,207



58/2003 திருவாதவூர் பக்கம் 98




120/2003 மேலவளவு பக்கம். 198




மாங்குளம் கற்படுக்கைகள் அண்மையில் வெளிப்படுத்தப்பட்டவை




124/2003 அரிட்டாபட்டி பக்கம். 203





61/2003 கச்சிராயன்பட்டி
பக்கம். 101
தற்போது திருமலை நாயக்கர்
அரண்மனையில் உள்ளது



திருமோகூர் திருவாழி ஆழ்வார்
141/2003 பக்கம். 229

த. நா. அ. தொல்லியல் துறை　　　　தொடர் எண் : 1 / 2003

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு:	—
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	478/1958-59
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்		
அரசு :	பிற்காலப்பாண்டியர்		
அரசன் :	—	ஊர்க் கல்வெட்டு எண்	1

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகையின் வடசுவர்.

குறிப்புரை : திருவாதவூர் திருமறை நாயனார் கோயிலில், செய்யப்பெருமாள் ஆரணந்தொழ நின்றான் என்பவன் சுப்பிரமணியர் உருவத்தினை எழுந்தருளுவித்தான். அத்திருமேனிக்கு அமுதுபடி, சாத்துப்படி முதலிய செலவினங்களுக்காக களவழி நாட்டுக் கருங்குளம் - களகுளத்தில் நிலம் அளிக்கப்பட்டது. கல்வெட்டு எழுத்துக்கள் பல இடங்களில் தெளிவாக இல்லை.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்தி கோனேரின்[மை]கொண்டான் தென் பறப்பு னாட்டுத் திருவாதவூர் உடையார் திருமறை நாயனார் கோயில் தானத்தாற்கும் இக்கோயில் செய்ய பெருமான் ஆரண

2. ந் தொழ நின்றானான இராசகண்டகோபால செய்ய பெருமாள் பேரால் எழுந்தருளப் பண்ணின ஸுப்ரஹ்மண்யப் பிள்ளையாற்கு அமுதுப்படி சாத்துப்படி உள்ளிட்டு வேண்டும் நித்த நிமந்தங்களுக்கு களவழிநாட்டு

3. கருங்குளம் களக்குளத்தில் எ[ழும்]போது சடைகோபன் விலை கொண்டு உட்கிடையான இவ்வூர் கோல்படி நிலம் நாலு மாக்காணியும் இன்னிலத்தால் வருங்கிணறு மாமர மற்றும் எப்பேற்பட்ட ஸ்வாம்யாதிகளும்

4. முன்னுடையாரும் முதல்லு[ம் உ]ழவுந் தவுந்து இவன் விலை கொண்ட படியிலே இவனுக்குக் காணியும் இன்னிலத்துக்கு கடமை அந்தராயம் காரியவாராட்சி வெட்டிப்பாட்டம் பஞ்சுபீலி ஸஹிவிரூஹப் பேறு வா

5. சல்பேறு இலாஞ்சினைப்பேறு தறியிறை செக்கிறை தட்டொலி தாட்டார்ப்பாட்டம் இடைவரி இனவரி ஏர்வரி மற்றும் எப்பேற்பட்ட ஸஊஹவ்ராஷிகளுந் தவிர்ந்து முன்பு நமக்கு முப்பத்தொன்பதாவது வரையும் இறு

6. த்துப் போதும் . . . இறைக்கு அச்சு இரண்டே காலே அரைக்காலும் முப்பத்திரண்டாவது தைமாதம் முதல் வரியில் கழித்து இப்பிள்ளை யார்க்கு அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட நித்த நிமந்தங்களுக்குடலாக

7. தந்தோம் . . . [இது] பிடிபாடாக கொண்டு வருூரழித்தவற் செல்ல இன்னிலம் நான்கெல்லையிலும் திருச்சூலஸூாபனமும் பண்ணிக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க : உ

8. மஞ்சக்குடியுடையான் எழுத்து:- யாண்டு ௩௰உ [நா]ள் உ௱அ :- இவை காலிங்கராயன் எழுத்து :- தாஊஷ் இது திருவெழுத்து:-

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13-14ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவாதவூர்		
மொழி :	தமிழ்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	478/1958-59
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பிற்காலப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	2
மன்னன் :	—		

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகையின் வடசுவர்.

குறிப்புரை : எண் 1/2003 கல்வெட்டின் செய்தியே இக்கல்வெட்டிலும் கூறப்படுகிறது கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

கல்வெட்டு :

1. ஸ்ரீ ஸ்ரீ த்ரிபுவனச்சக்கரவத்தி கோநொன்மை கொண்டான் களவழி நாட்டு இலுப்பைக்குடிக் காரணவர்க்கு திருவாதவூர் உடையார் திருமறை நாயனார் கோயில் செய்யபெருமாள் ஆரணந்தொழ நின்றானான

2. இராசகண்டகோபாலர் செய்யபெருமாள் பேரால் எழுந்தருளப் பண்ணின ஸர்வஜ்ஞப் பிள்ளையாற்கு அமுதுபடி சாத்துப்படி உள்ளுட்டு வேண்டும் நித்த நிமந்தங்களுக்குத் தங்கள் பற்றில் இருக்கும் கருங் குளம் களக்குளம் எழும்போ

3. து சடைகோபன் விலை கொண்டு உட்கிடையான தங்களூர் கோல்படி நிலம் நாலு மாக்காணியும் இந்நிலத்தால் வரும் கிணறு மாமர மற்றும் எப்பேற்பட்ட ஸர்வஸ்வாம்யங்களும் முன்னுடையாரும் முதலும் உழவுந் த

4. விர்ந்து இவன் விலை கொண்டமையிலே இவனுக்குக் காணியும் இன்னிலத்துக்கு கடமை அந்தராயம் காரியவாராட்சி வெட்டிப்பாட்டம் பஞ்சுபீலி ஸஞ்விக்கிரகபேறு வாசல் பேறு இலாஞ்சினைப் பேறு

5. தட்டொலி தட்டார்பாட்டம் ஏர்வரி இனவரி இடைவரி மற்றும் எப்பேற்பட்ட ஸமஸ்தப்ராப்திகளும் தவிந்து முன்பு[டையா]ரையும் இறுத்து போதும் அச்சு இரண்டேகாலே அரைக்காலும் மு . . .*

---

* கல்வெட்டு முற்றுப்பெறவில்லை

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 14-ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	481/1958-59
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பிற்காலப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	3
மன்னன் :	பராக்கிரம பாண்டியன்		

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகையின் வடசுவர்.

குறிப்புரை : திருவாதவூர் திருமறை நாயனார்க்கு செங்கழுநீர்ப்பூவும் பிறபூக்களும் அளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டு அவற்றை அளித்தோர்க்கு, வேதநாயக நல்லூரில் நிலம் காணியாகக் கொடுக்கப்பட்டதைக் கூறுகிறது. இக்காணியைப் பெற்றுக் கொண்டவர்கள் நாள் ஒன்றுக்கு முக்குறுணி பூவும், ஆண்டு ஒன்றுக்கு செங்கழுநீர்ப்பூ இருபதினாயிரமும் கோயிலுக்குக் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. பராக்கிரம பாண்டியன் கி.பி. 1315 - 1334ல் ஆட்சிசெய்தவனாகலாம்.

கல்வெட்டு :

1. யது ஜகத் நிர்மாண ஸம்ஹார காரணம் ஸ்ரீமது வாம வாமீபஸ்ய பாஸநம் ஸாஸ்வதம் வம்ம நம்பிள்ளை பராக்ரம பாண்டிய தேவற்கு [. ய] ஜ்ஷஹ நாயற்று வெவ்வு வக்ஷ

2. த்து உபாதியும் பெற்ற சோதி நாள் நம் தொண்டர்களில் திருப்பூவணத்தன் பொடியணிமார்பனுக்கும் தம்பிக்கு நல்லானுக்கும் சொக்கனான திருப் பாடகப் பி

3. ச்சனுக்கும் விண்ணவதரயப் பெருமாளுக்கும் இவ[ர்]*கள் கண்டு நம் பத்தன் மலைகுனிய நின்றானான காடுவெட்டி நமக்கு உத்யாநம் பற்று ஆக தந்த குளமாவது நம் அ

4. டுக்களைப்புறம் பனைங்காட்டங்குடிய் இறங்கல் மீட்ட பெருமாள்நல்லூர் பற்றில் சிவதிராக்குடியான வேதநாயக நல்லூரில் உதகம் கைக் கொண்டு இதுக்குப் ப

5. ற்று ஆன இக்குளம் சாதனப்படியான பெருநான்கெல்[லைக்குட்பட்ட] நஞ்சை புஞ்சை நத்தம் தோட்டம் குளமும் கால்வாயும் மரமும் கன்றும் மற்றும் [இப்]*பெ

6. ரு நான்கெல்லைக்குட்பட்ட எப்பேற்பட்ட ஸர்வப்ராப்திகளும் காணியாக கைக்கொண்டு இவன் உதகத்துக்கு நாள் ஒன்றுக்கு இவன் நமக்கு அளக்கும்பூ

7. [வா]யில்க் காலால் ஆள் மூன்றுக்கு அளக்கும் பூ முக்குறுணியும் ஆண்டு ஒன்றுக்கு இடுவதான செங்கழுநீர் இருபதினாயிரமும் இடுவானாகவும் நாலு பவுத்ரமுள்ளதுக்

8. கு அசல்க்கோயி[மரதசர்] இப்பூவிலே செலவு பெறுவானாகவும் அளந்த [பூவுமாக] பூத்தாழ்வு கிடந்ததுக்கு ஈராண்டாக செலவறுப்பானாகவும் இவகளுக்கும்

9. இவகள் வற்கத்தாற்கும் இவ்வோலை பிடிபாடாக கொண்டு சந்திராதித்த [வரை] செல்வதாக கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க வ இப்படிக்கு பொன்னம்பல

10. ப்பட்டன் எழுத்து வ குலைசேகரபட்டன் எழுத்து ப்ரஸாதம் சேதருளின திருமுகப்படிக்கு பராக்ரம பாண்டிய பட்டன் எழுத்து வ இப்படிக்கு வேத நாயகபட்டன் எழுத்து தேவ

11. கன்மிகளில் விக்கிர[ம]*பாண்டிய பிரமாதிராயன் எழுத்து அழகிய பாண்டிய பிரமாதிராயன் எழுத்து மாடாபத்ம திருமாளிகைப்பிள்ளை எழுத்து :- இக்கோயில் சிவப்பிர . . . .

12. ா . . களில் . . . திருவாணை ஆசாரியன் எழுத்து :-

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	7
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1322
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	482/ 1958-59
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பிற்காலப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	4
மன்னன் :	பராக்கிரமபாண்டியன்		

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகையின் வடசுவர்.

குறிப்புரை : தென்பறப்பு நாட்டுத் திருவாதவூரில் நடுவீதியில் இருந்த சீவல்லவபுரத்து வியாபாரி திருப்பூவணமுடையானான அரசன் சக்கரவர்த்தி உள்ளிட்டவர்கள் திருவாதவூர் கோயிலுக்கு இறையிலியாக இருமா அரையே அரைக்காணி நிலம் அளித்ததை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இது அரசனது அரண்மனைக்குரிய அடுக்களைப் புறப் பற்றிலிருந்து அளிக்கப்பட்டது. இக்கல்வெட்டில் கோயில் வினியோகம் தரவுக்கூலி, ஊர் வினியோகம் போன்ற பல வரிகள் அரசனது கணக்கிலிருந்து கழித்துக் கொடுக்கப்பட்டன.

கல்வெட்டு :

1. ஸமஸ்தஜகதாதார ஸோமகுலதிலக . . . . ஜமது . நிகிலரண ஸம்ஹார காரணஂ ஸ்ரீமது வா[ஞ்]சிராஜாதிராஜ பரமேஸ்வர வீரவிக்கிரமஂ வமஂ நம்பிள்ளை பராக்கிரமபாண்டிய தேவற்கு யாண்டு ஏ

2. ழாவது கார்த்திகை மாஸம் தென்பறப்பு நாட்டு திருவாதவூரில் நடுவில் வீதியான சீவலபுரத்தில் வியாபாரிகளில் திருப்பூவணமுடைய அரசானான ச[க்]கரவத்தி

3. உள்ளிட்டார் நா[ள் புண்யன் நாழிகை பாப்பா]ரோமும் கோவணவ ரோமும் கூடிநின்று அனுதரித்து போதுவதாக இவன் காராண்கிழமை காணியாந நம்

4. அடுக்களைப்புறப் பற்றில் கீழ்க்களர்ச் செய் தடி ஒன்றில் நிலம் இரு மாவும் வாணியன்செய் தடி ஒன்று நிலம் அரைமா அரைக்காணியும் ஆகநிலம் இருமா

5. வரையே யரைக்காணியில் கடைமை அந்தராயம் பொன்வரி கோயில் வினியோகம் தரவுகூலி ஊர்வினியோகம் மற்றும் இன்னிலத்தால் வந்த எப்பேறபட்ட

6. இறுப்பும் கழித்து குடுத்து நம் வரியிலார் கணக்கிலும் இவனுக்கும் இவன் வர்க்கத்தாற்கும் இறையிலியாக குடுத்தோம் இவை குலசேகர பட்டன் எழுத்து இவை

7. பொன்னம்பல பட்டன் எழுத்து உ. இவை பராகூச பாண்டிய பட்டன் எழுத்து உ. இவை வேதநாயக பட்டன் எழுத்து உ. இவை . . . . பட்டன் எழுத்து.

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	7
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1322
ஊர் :	திருவாதவூர்		
மொழி :	தமிழ்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	483 / 1958-59
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பிற்காலப் பாண்டியர்		
அரசன் :	பராக்கிரம பாண்டியன்	ஊர்க் கல்வெட்டு எண்	5

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகையின் வடசுவர்.

குறிப்புரை : திருவாதவூரில் இருக்கும் சீவல்லவபுரத்து திருப்பூவணமுடையான் அரசப்பிள்ளை சக்கரவர்த்தி என்பவன் திருவாதவூர் உலகளந்த சோழப் பேரேரியின் பாசனத்திலுள்ள சில நிலங்களைத் திருவாதவூர் கோயிலுக்கு இறையிலியாக அளித்ததை இக்கல்வெட்டு கூறுகிறது. கோயிலில் திருவாபரணம் பழுது நீக்குவதற்கு (திருவாபரணப் பார்வைக்கு) இக்கொடை அளிக்கப்பட்டது. (இளவரசர்) தேவப் பெருமாள் திருமுகப்படி பலவரிகள் அரசவருவாயிலிருந்து கழிக்கப்பட்டதை இக்கல்வெட்டு கூறுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்ரீமதுகீத்திக்கு மேல் வ ஸ்ரீகோச்சடையபன்மரான திரிபுவன சக்கர வத்திகள் ஸ்ரீபராக்ரம பாண்டிய தேவற்கு யாண்டு[1] ஏழாவது மார்கழி மாதம் ௰௨ திருவாதவூருடையார் திருமறைநாய
2. னார் கோயில்க் காரியம் செய்வார் தேவகன்மிகள் ஸ்ரீருத்ர ஸ்ரீமாஹேஸ்வர [கண்]*காணி செய்வார்களோம் இவ்வூர் சீவலபுரத்து திருப்பூவணமுடையார் அரசபிள்ளையான சக்ரவ
3. த்தியள் உள்ளிட்டாற்கு பிடிபாடு பண்ணிக்குடுத்த பரிசாவது இன்னாய னார் திருவாபரணப் பார்வைக்கு இவ்வூர் உலகளந்த சோழப் பேரேரிக் [குலைக்]கீழ் பெரிய மடையா

4. லும் சிறிய மடையாலும் நீர் பாஞ்சு விளையும் [ம]னை காராண்மை காணியான மனைப்பற்றில் கிடக்காச் செய் தடி ஒன்றில் நிலம் முக்காணி அரைக்காணி முந்திரிகைகீழ்

5. ரையும் வாணியன்செய் தடி ஒன்றில் நிலம் முக்காணி அரைமா அரை காணி முந்திரிகைக் கீழரையே மூன்றுமா முக்காணியில் நாயனார் கடமை அந்தராயம் கோயில் வினியோ

6. கம் தரவுகூலி பொன்வரி [ஆள]மஞ்சி[சி]*ல் வரி மற்றும் இன்நிலத்தால் வந்த ஸமஸ்தப்ராப்திகளில் இறையும் கழித்து நாயநார் தேவப் பெருமாள் ப்ரஸாதஞ் செய்தருளின திரு

7. முகப்படி கழித்துக் குடுத்தபடி . . . களும் இந்த இறை கழித்துக் கொடுத்தோம் இவனுக்கும் இவன் வற்கத்தாற்க்கும் சந்த்ராதித்தவற் செல்வதாகப் பிடிபாடு பண்ணிக்குடுத்தோம் ச[க்]

8. கூவத்தி உள்ளிட்டாற்கு சீகாரியம் செய்வார் தேவகன்மிகள் ஸ்ரீமாஹேஸ்வர கண்காணி செய்வார்களோம் இப்படி சுந்தரபாண்டியப் பிரமாதராயன் எருத்து [இப்படி] . . .

9. . . . பாண்டிய பிரமாதராயர் எழுத்து இப்படி செய்ய பாண்டியப் பிரமாதி ராயன் எழுத்து இப்படி அழகியபாண்டிய பிரமாதிராயர் எழுத்து இப்படி . . .

10. எழுத்து உ இப்படி சீகாரியம் வில்லவராயப் பிரமாதராயன் எழுத்து இப்படிக்கு . . . ஆசாரியன் எழுத்து

---

1. 'யாண்டு' என்பது குறியீடாக உள்ளது.

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	9
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1324
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	485/1958-59
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பிற்காலப் பாண்டியர்		
மன்னன்	பராக்கிரமபாண்டியன்	ஊர்க் கல்வெட்டு எண்	6

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகையின் வடசுவர்.

குறிப்புரை : அரசனுக்குரிய அடுக்களைப்புறமான தென்பறப்பு நாட்டு கூட்டாம்புளியான வலங்கை மீகாமநல்லூரில் உள்ள நிலங்கள் இறையிலியாக அளிக்கப்பட்டதை இக்கல்வெட்டு கூறுகிறது. இதன்படி பழம்பொன் எண்பதும், இராசிபணம் எண்ணூறும் ஆண்டு தோறும் திருவாதவூர்க் கோயில் நிர்வாகத்தினரிடம் கொடுக்கப்பட்டது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸமஸ்த த்ரைலோக்ய நிஸ்தாரண[த்ராண] ஸம்ஹார காரணம் ஸ்ரீமது ஸ்ரீவாதவூரீஸஸ்ய [ப்ராஸ]தம் ப்ராப்யதம் வரம். நம்பிள்ளை பராக்ரம பாண்டிய தேவற்கு

2. யாண்டு ௯ வது மாசிமாதம் முதல் நம் . . . களில் . . . அம்மையார் நமக்கு அடுக்களைப் புறமாக நம்பிள்ளை பராக்ரமபாண்டிய தேவற்கு

3. . . . தென்பறப்பு நாட்டு கூட்டாம்புளியான வலங்கை மீகாம நல்லூர் உள்ளிட்ட பற்றுக்கும் பல உபாதி உள்

4. ப்பட ஆண்டொன்றுக்கு நாம் கொள்ளுவுதான பழம்பொன் எண்பதுக்கும் இராசிபணம் எண்ணூறும் ஆண்டுதோறும் நம்(மைப் பாரா)

5. கோவணவர் [பிடிபாட்டு] ஓலை கொண்டு சிலவு அறுத்தும் போதச் சொன்னோம் இப்படிக்கு கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க

6. ப்ரஸாதஞ் செய்தருளினபடிக்கு பொன்னம்பல பட்டன் எழுத்து இப்படிக்கு பராக்ரம பாண்டிய ஹட்டன் எழுத்து குலசேகரபட்டன் எழுத்து

7. அழகிய பாண்டிய பிரமாதிராயன் எழுத்து வடுகப்பிராயந் எழுத்து ஸதாசிவஹட்டன் எழுத்து உ. விஷ்வநசுவரன் எழுத்து உ.

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	9
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 14-ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	484/1958-59
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	7
அரசு :	பிற்காலப் பாண்டியர்		
மன்னன் :	—		

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகையின் வடசுவர்.

குறிப்புரை : திருவாதவூர் திருமறைநாதர் கோயிலில் அம்மான் மஹாபலி வாணாதராயர் அவருடைய பெயரால் பங்குனித் திங்களில் ஏற்படுத்திய வலங்கை மீகாமன் திருநாள் செலவினங்களுக்கு கூட்டாம்புளி, பாதிரிக்குடிப் பகுதியில் குடிநீங்கா இறையிலியாக நிலங்கள் அளித்ததை இக்கல்வெட்டு கூறுகிறது. இந்நிலங்களில் பயிரிடப்பட்ட பயிர்களின் பெயர்களும் இவற்றிற்குரிய வரிகளும் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றன. இவற்றில் பிள்ளையார் நோன்பு என்ற வரியும் குறிப்பிடப் படுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவனச்சக்ரவத்தி கோனேரின்மை கொண்டான் தென்பரப்பு நாட்டுத் திருவாதவூருடையார் திருமறைநாயனார் கோயிலில் பதிபாத மூலப் பட்டுடைப் பஞ்சாசாரியன் தேவ

2. கன்மிகளுக்கு இன்னாட்டு பாதிரிக்குடி உள்ளிட்ட பற்றில் கூட்டாம் புளி உள்ளிட்டபற்று அம்மான் மஹாபலி வாணாதராயர் தம்பேரால் கட்டின வலங்கை மீகாமன் திருநாளாக பங்குனி மாத

3. த்து கட்டின திருநாளுக்கு இவ்வூர் உள்ளிட்ட பற்று ஒன்பதாவது மார்கழி மாதம் முதல் முதல் அடங்க குடி நீங்கா இறையிலியாக குடுத்து இவ்வூர் காரும் மறுவும் ஒரு பூவும் அடியும் கரும்

4. பும் செங்கழுநீர் கொழுந்து வாழை மஞ்சள் இஞ்சி தெங்கு கமுகு மாப் பலா பருத்தி ஆமணக்கு உள்ளிட்டு தான் வேண்டும் பயிற்ச் செய்து கொள்ளும்படியும் சொல்லி இவ்(வ்)வூர் உள்ளி

5. ட்டபற்றில் வரும் கடமை அந்தராயம் பொன்வரி வினியோகம் கார்த்திகை பொன் பச்சை பிள்ளையார்நோன்பு தெணூ கொற்றிலக்கை கடைக்கூட்டு இலக்கை நத்தப்பச்சை எடுத்து

6. க்காட்டும் பச்சை ஆனைச்சாலை குதிரைப்பந்தி சந்திவிக்கிறகம் பஞ்சு பீலி . . .

7. துட்டு[தே]தவை தச்சுதேவை தறியிறை செக்கு இறை தட்டொலி தட்டார்ப் பாட்டம் ந . . . .[1]

---

1. கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	25
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1281
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	483/1962-63
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பிற்காலப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	8
அரசன் :	மாறவர்மன் வீரபாண்டியன்		

இடம் ; திருமறைநாதசுவாமி திருக்கோயில், நடராசர் சன்னதி மேற்குச்சுவர்.

குறிப்புரை : திருமறைநாதர் கோயிலில் உலாக் காலங்களில் இறைவனைச் சுமந்து செல்லும் ஸ்ரீபாதம் தாங்கிகளான எட்டு நபர்களுக்குக் கோயிலைச் சேர்ந்த ஸ்ரீருத்ர மாகேஸ்வரர் ஆன தர்மகர்த்தாக்கள் இவ்வூரின் சில ஏரிகளின் பாசணத்தில் உள்ள நிலங்களைக் காணியாகக் கொடுத்த செய்தி சொல்லப்படுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மரான த்ரிபுவன சக்ரவத்திகள் ஸ்ரீவீரபாண்டிய தேவற்கு யாண்டு உ௰௫ வது ஜேஷ்ட நாயற்று பூர்வபக்ஷத்து [த்ரயோதசி]யும் வெள்ளிக்கிழமையும் பெற்ற திருவோநத்து நாள் [தென்பறப்]

2. பு நாட்டுத் திருவாதவூர் உடையார் திருமறைநாயனார் கோயில் ஸ்ரீ ருத்ர ஸ்ரீமாஹேஸ்வர தந்ம கர்த்தாக்களோம் இந்னாயநார் கோயில் சீபாதம் தாங்கும் ஆண்டார்களில் . . .

2. ப்பெருமாளான சோழகோன் பிச்சனுக்கும் எங்குமா நின்றான் எழும் போதழகியானான ஆரண்யன் தொழும் பிச்சனுக்கும் பக்கமழகியான் சொக்கனான வேதனாயகப் பிச்சனுக்கும் மறக்கவுணாதான் ஆக . . .

4. ராய பிச்சனுக்கும் திருபூவணமுடையான் சோதியான சுன்தர பாண்டியப் பிச்சனுக்கும் அழகியான் மக்களான குலசேகரப்பிச்சனுக்கும் பரம்பன் [கூத்]தாடுவானான இராசகண்ட கோபால பிச்சனுக்கும் . . .

5. சண்டேசுர பிச்சனுக்கும் ஆக பேர் எண்மற்கும் பிடிபாடு பண்ணிக் குடுத்த பரிசாவது இற்றை நாள் இவர்கள் சீபாத[ம்]* தாங்க இட்ட நிலமாவது இவ்வூர் உலகளந்த ெ . . . பேரேரிக் குளக் கீழ் பெரியமடை

6. விளையும் காஞ்சவர்கா . . ம் உள்ப்பட தடி இரண்டு ரூ ப . . .வாய்க் காலால் நீர்பா[ய்ஞ்சு] விளையும் சண் . . . குளமும் விசையராய நிலையில் நாயனார் திருவிளக்குபட்டி[யும்] பேரிகைப்ப . . .

7. ரூ சு ஆக ரூ ௩ உப இந்த முக்காலே இரண்டு மாவுக்கு தேற் குளத்துக்கு விளைந்த தாங்கு பூள மஉப . . . இராச கண்ட கோபால . . . இவர்களுக்கு சீ பாதந் தாங்க . . . . குடியானசூர

8. கண்டன் குளமும் இதன் தென்பால் சின்னமூதி குளமும் பெருநான் கெல்லைக்குட்பட்ட ரு ௭ வுத .. களுக்கும் திருசெட்டி .. குடன் தடி .. ந்தா .. தடி ச ரூ ... நிலம் இருமாவரை ...

9. ஆள் மஎ ஏரிக்கும் இட முன்னாள் இவர்களுக்கு இட்ட சண்டேசுர நல்லூர் வயலில் ரூ ரு திருவாதவூர் வயலில் . . . வயக்கலில் ரூ . . . .

10. ஆக ரூ ... நிலம் இரண்டே காலே முக்காணி முந்திரிகையும் சண்டேசுர நல்லூர் . . . சின்னமூதி குளம் பெருநான் கெல்லை ... பாதி களுக்கும். . . .

11. மும் தாங்கி ஏரிகளும் . . . . வார்களாகவும் ஏரிகளும் புக ... ஞ்சிக்கு முன்நாளிறுக்கும் எச்சோறு விழுக்காடு .. று வாராகவும் .. இடுவார் களாகவும் இப்படிக்கு இக்குளங்களும் யின்நிலங்களும் காணியாக ெ..

12. நிமந்தம் செய்து போதுவார்களாக பிடிபாடு பண்ணி[க் கொடுத்தோ இவ்வெண்மற்கும் ஸ்ரீராஜ ஸ்ரீகாஹொய்ஸள யஉஉஉ கர்த்தாக்கேளாம் வ இவை சுந்தர பாண்டி . . . .

13. எழுத்து இவை குலைசேகர ஸ்ரீஹாயராயன் எழுத்து இவை ... மாத ராயன் எழுத்து இவை . . . யன் எழுத்து இவை குலைசேகரபட்[ட]*ன் எழுத்து உ இவை நாப்பத்தெ . . .

14. ன் எழுத்து இவை செய்ய பாண்டிய ஸ்ரீஹாயராயன் எழுத்து.. ஸ்ரீஹாயிராயன் எழுத்து உ . . . இவை இராச கண்ட கோபால ஸ்ரீஹா யராயன் எழுத்து . . .

15. ரணைச் சாமுண்டன் எழுத்து உ சுஷூத . . . . . இவர்கள் சொல்ல இப்பிடி பாடு எழுதினேன் ஆலால சுந்தரன் எழுத்து

மாவட்டம் : மதுரை

வட்டம் : மேலூர்

ஊர் : திருவாதவூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : பிற்காலப்பாண்டியர்

மன்னன் : மாறவர்மன் குலசேகரன்

ஆட்சி ஆண்டு : 29

வரலாற்று ஆண்டு : கி.பி. 1297

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை } —

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் } 9

இடம் : திருமறைநாதசுவாமி கோயில், திருச்சுற்று மாளிகையின் தெற்குச்சுவர்.

குறிப்புரை : எம்மண்டலமும் கொண்டருளிய மாறவர்மன் குலசேகரபாண்டியன் ஆணைப்படி திருவாதவூர் திருமறைநாயனாரின் பழந்தேவதானமான பனங்காடிப் பற்றில் இறையிலியாக நிலங்கள் அளிக்கப்பட்டதை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது. கூத்தாண்டாள் மகள் அழகியநாச்சி, தாயாண்டாள் என்ற பெண்கள் இக்கொடையைச் செய்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மரான திரிபுவனச்சக்ரவத்திகள் எம்மண்டலமுங் கொண்டருளிய குலசேகரதேவர்க்கு யாண்டு உ௰கூ வது நாள் . . ௱௰௩
2. ஸ்வஸ்திஸ்ரீ ப்ரஸாதஞ்செய்தருளிய திருமுகப்படி உ திரிபுவனச் சக்கரவத்திகள் கோநேரின்மை கொண்டான் [செசிங்க] தேவர்க்கு உடை
3. யார் திருவாதவூருடையார் திருமறை நாயனாற்க்குப் பழந்தேவதான மான பனைங்காடிப் பற்றில் காகூத்தாண்டாள் மகள் அழகியா . .
4. லம் நாச்சியும் தாயாண்டாளும் சேமாழ்வாளும் அனுபவி[த்து இவர்கள்] மக்கள் பக்கல்த் தாம் ஒற்றியும் விலையுங்கொண்ட ஊ[ர்] . . .
5. சனேரி முன்பு நின்றபடியே தமக்கு காராண்மை . . யும் இந்த னாய னார்க்குக் கடமை அந்தராயம் பொன்வரியும் இறுத்

6. . . . ராகச் சொன்னோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு *ஆசந்ராதித்யவத்ச்* செல்ல கல்லிலும் செம் . . . . .

7. [பிலும்] வெட்டிக்கொள்க . . . அச்சு ஒன்றரையு . . கடமையும் அந்த ராயமும் கோயில்த் தானத்தார் வசம் செ . . .

8. லவறுத்துப் போதுக இவை விக்ரமபாண்டிய வாணாதிராஜனெழுத்து இவை காலிங்கராஜனெழுத்துக் இப்படிக்[கல்]

9. லில் வெட்டிநேந் இந்நாயனார் கோயில் *ஸிவ்வாசாயுக்*ன் பெருமாள் ....

---

1. கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	29-வது
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	479/1962-63
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன்பதிப்பு :	—
அரசு :	பிற்காலப்பாண்டியர்		
மன்னன் :	—	ஊர்க் கல்வெட்டு எண்	10

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில் திருச்சுற்றுமாளிகை தெற்குச்சுவர் உட்புறம்.

குறிப்புரை : அரசனது திருமுகப்படி பள்ளிக்குறிச்சி என்ற ஊர் திருவாதவூர் திருமறைநாயனார் கோயிலுக்கு இறையிலியாக அளிக்கப்பட்டதை இக்கல்வெட்டு கூறுகிறது. படை வீரர்களுக்கு அளிக்கப்பட்ட மானிய ஊர் பள்ளிக்குறிச்சி. இதனைப் படைக் காரணவர் என்பார் நிருவகித்துள்ளனர்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ:உ ஸ்ரீஸாஉழ செய்தருளின திருமுகப்படி உ திரிபுவனச் சக்கரவத்திகள் கோநேரின்மை கொண்டான் பள்ளிக்குறிச்சி படைக் காரணவர்க்கு தங்களூர்
2. [இருபத்] தொன்பதாவது ஆடிமாதம் முதல் திருவாதவூர் உடையார் திருமறை நாயனார்க்குத் தேவதானமாகக் குடுத்தோம் இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாக
3. க்கொண்டு தாங்கள் பொன்வரி இறுத்துப் போதும் அச்சுப்பத்தும் இக்கோயில் தானத்தாற்கு இசைய இறுத்து சந்திராதித்தவல்ச் செல்லக் கல்லிலும்
4. [செம்பிலும்] வெட்டிக் கொள்க இவை விக்கிரமபாண்டிய வாணாயி ராஜனெழுத்து இவை காலிங்கராசனெழுத்து உ யாண்டு உ௰கூ வது[நா]*ள் ரு௰௩ இப்படி கல்வெட்டிநேன்
5. இந்நாயனார் கோயில்ச் சில்பாச்சாரியன் பெருமாள் பெரியாநான [ஸேவ]கி திவாகரனெழுத்து.

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	29
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1297
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	480/1962-63
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பிற்காலப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	11
அரசன் :	முதலாம் மாறவர்மன் குலசேகரன்		

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகையின் தெற்குச் சுவர் உட்பக்கம்.

குறிப்புரை : திருவாதவூர் திருமறை நாயனார் கோயிலுக்குப் பள்ளிக்குறிச்சியான சோணாடு கொண்ட பெருமாள் நல்லூர் இறையிலியாக அளிக்கப்பட்டதைத் தெரிவிக்கும் அரசஆணை. கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட இறையிலி நிலத்துக்கு பொன்வரி வாங்கக்கூடாது என அரசஆணை வெளியிடப்பட்டுள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்ரீ கோமாறபன்மரான திரிபுவன சக்ரவத்திகள் எம்மண்டலமுங் கொண் டருளிய குலசேகர தேவற்கு யாண்டு உ௰கூ வது ஆடி மாதம் தென்(பறபு) பறப்பு நாட்டுத் திரு

2. வாதவூர் உடையார் திருமறைநாயனார் கோயில் ஸ்ரீமாஹேஸ்வர ரோம் இன்னாட்டு இந்நாயனார் தேவதா[ன]*ம் பள்ளிக்குறுச்சியான சோணாடு கொண்ட பெருமாள் நல்லூர் ஊ

3. ர்க்குச்சமைந்த ஊராற்கு பிடிபாடு பண்ணிக் குடுத்த பரிசாவது இவ்வூர் உலகுடையநாயனார் [illegible] சேதருளின திருமுகப்படி இந்நாயனார்க்கு இறுப்பதாக வந்த அச்சு பத்துக்கு இ

4. வ்வூர் முன்பிலாண்[டு]*கள் இறுத்துப் போதும் நா[ளி]டு விழுக்காடு அச்சொழிய ஏற இறோம் என்று சொல்லுவராய் இக்கோயில்த் தன்மத்துக்கு கடவ தேவர் இராசகண்[ட] கோபால தேவற்கு

5. நாளிடு விழுக்காடு கோ[ள்ள] தேவர் சாதனம் வருகையில்

6. நாள் ஒன்றுக்கு இறுத்துப் பொன்வரி அச்சு ௬ இவ்வா . . . .

7. செம்[பிலும்]* வெட்டிக் குடுத்தோம் ஸ்ரீ ஆஸ்ரீமாஹேஸ்வரரோம் பள்ளிகு..

8. ..கு இப்படிக்கு....[1]

---

1. கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

மாவட்டம் : மதுரை

வட்டம் : மேலூர்

ஊர் : திருவாதவூர்

மொழி : தமிழ்

எழுத்து : தமிழ்

அரசு : பிற்காலப் பாண்டியர்

மன்னன் : —

ஆட்சி ஆண்டு : —

வரலாற்று ஆண்டு : கி.பி. 13-ஆம் நூற்றாண்டு

இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை

முன் பதிப்பு : —

ஊர்க் கல்வெட்டு எண் : 12

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகையின் தென்புற உட்சுவர்.

குறிப்புரை : திருவாதவூர் திருமறைநாதர் கோயிலுக்கு இறையிலி நிலம் அளித்ததைக் குறிப்பிடுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபுவனச் சக்கரவத்திகள் கோனேரின்மை கொண்டான் திருவாதவூர் திருமறை (நா) நாயநார் கோ[யி]ல் தானத்தார்க்கும்

2. ஸ்ரீமாஹேஸ்வரர்க்கும் இத்தேவர் தேவதானம் இவ்வூர் நிலத்தில் தேவன் பட்டனான விக்கிரம பாண்டிய மாராயனுக்கும் பட்டன் காங்

3. கேயனுக்கும் காராண்மையான[1] . . . . . முன்பு . . படி பகவதியாழ் வார்க்கு

4. யிந்த வீர பாண்டிய தேவற்க்கு யா[1] . . . கொண்டு இட்ட பொன்வரிக்கு இவர்களுக்கு ஊர் [கீழ்] திறப்பான

5. நிலத்தால் வந்த பொன் வரி பண்டைக் கல்வெட்டின்(ப்) படியே இட்டுக் கொள்ளாதோம் இப்படி கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளக இப்படி . . .

6. படிக்குச் செல்வதாக இராசநாராயணதேவன் அடைப்பில் ச[1] . . . .
வரக்காட்டச் சொன்னோம் இவை சுந்தரபாண்டியக் களா

7. ப்பாளராயன் எழுத்து யாண்டு இருப்பதா . . . பழந்தீபராயன் எழுத்து
இவை பல்லவராயன் எழுத்து இப்

8. படிக் கல்வெட்டினேந் கயில[ா]சமாரா . . . தாளனான ஸேவேசு வல்லவ
சூவாரியன் எழுத்து

---

1. கல்வெட்டு இவ்விடங்களில் சிதைந்துள்ளது.

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13 - ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	482/1962-63
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பிற்காலப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	13
அரசன் :	—		

இடம் : திருமறைநாதசுவாமி கோயில் திருச்சுற்றுமாளிகை, தென்புற உட்சுவர்.

குறிப்புரை : கல்வெட்டின் ஒரு பகுதி சிதைக்கப்பட்டுள்ளது. பெருமாளையும் நாச்சியாரையும் எழுந்தருளுவித்து ஆண்டு தோறும் 15 கல நெல் வருவாய் வரும்படி நிலம் கொடுக்கப்பட்டமை இக்கல்வெட்டில் சொல்லப்படுகிறது. கால கண்டதேவன் என்ற பெயரில் முகத்தல் அளவு ஒன்றும் குறிக்கப்படுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஜகத்ரு உத்பத்திஸ்திதிஸம்ஹார காரணாய ஸ்ரீச[சொ]க்கநாதாய . . .
2. நிறைந்து கூடிய பெருந்திருக்கூட்டத்து ஸ்ரீருத்ரமாஹேஸ்வரோம் இ
3. பெருமாளையும் நாச்சியாரையும் எழுந்தருளுவித்து . . . . செக் . . . [குடி]
4. தாங்கியால் நிலம் ஒன்றே இரண்டு மாவுக்கும் வினியோகம் ஆட்டை . . . .
5. திருவாயிலமர்ந்தருளின நங் கோவணவரும் நம் கை[பிடிப்]பாரும் தங்களு
6. கும் காலகண்ட தேவனால் பதினைங் கல நெல்லு ஆட்டை வட்டம் வினியோகம் வைத்து தரவு கொள்வானாகவும் . . .

7. இப்படியே இவளுக்கும் இவ[ள்]வற்கத்தாற்கும் ஆசந்த்ராதித்தவல் செல்வ தாகவும் இப்படி கல்லிலும் செம்பிலும் . . .

8. இப்படிக்கிவை திருவம்பலபட்டன் மகன் சோலையான திருவாதவூர் பெருமாள் எழுத்து

9. . . . . எழுத்து இப்படிக்கு இவை ஆள்கொண்டான் அம்பலக்கூத்தன் எழுத்து

10. . . . ம் ஃட்டன் எழுத்து இவை வீரபத்திர அப்பன் எழுத்து இப்படிக்கி இவை . . . .

11. ஸாஹேஸ்ரக் கண்காணி சாத்தமங்க[ல*]முடையான் எழுத்து இப்படிக்கு இவை . . . மேசுவரன் எருத்து

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	30
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1298
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	472/1962-63
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பிற்காலப் பாண்டியர்		
மன்னன்	முதலாம் மாறவர்மன் குலசேகரன்	ஊர்க் கல்வெட்டு எண்	14

இடம் : திருமறைநாதசுவாமி கோயில் திருச்சுற்று மாளிகை, தெற்குச்சுவர் உட்புறம்.

குறிப்புரை : திருமறைநாத சுவாமிக்குத் திருநந்தாவிளக்குகள் இரண்டு எரிப்பதற்காகத் திருவாதவூர் கைக்கோளன், முதலி ஆட்கொண்டான், ராகுத்தன் ஆகியோர் 132 ஆடுகள் அளித்ததை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது. இராகுத்தன் என்பதைக் குதிரை வீரன் எனக் கொள்ளலாம்.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாற பன்மரான திரிபுவனச்சக்கரவத்திகள் எம் [மண்டல முங் கொண்டருளிய] ஸ்ரீகுலசேகர தேவற்கு யாண்டு

2. ௩௰வது ஸிம்ஹ நாயற்று உ௰தியதி வூஸ்வூவக்ஷத்து ஸப்தமியும் [சனிக் கிழமை] பெற்ற மூலத்தில் நாள் தென்பறப்பு நாட்டுத் திருவாதவூர்க் கைக்கோ

3. ளரில் முதலி ஆட்கொண்டானேன் உடையார் திருமறைநாயனார்க்கு [சந்திராதித்தவற்] செல்லக் கடவதாக வைத்த திருநந்தாவிளக்கு ஒன்றும் ம

4. . . ரைத்தான் இராகுத்தர் வைத்த திருநந்தாவிளக்கு ஒன்றும் ஆக விளக்கு இரண்டுக்கும் இந்நாயனார் . . . இடையரில் சிங்கன் கொற்றியான . . .

5. நாவுக்கரயன் கோன் கொண்ட ஆடு சயசம் . . . . நாற்பத் தெண் ணாயிரக் கோன் கைக்கொண்ட ஆடு சயசம் குடிமை மேவு கருனன் ஆரையனான

6. . . கோன் கை கொண்ட ஆடு சயச ஆக ஆடு ௱௬௰௨ இவ்வாடு நூற்று முப்பத்திரண்டும் சாகா மூவா பேரா

7. . . றுக்கு . - . . அட்டு

8. றுக்கு சிவபாத கோந் தற்குறிக்கும் . . யிரக் கோன் தற்குறிக்கும் . . . . அடைக்கோன் தற்குறிக்கும்

9. சுந்தர நம்பி எழுத்து இப்படிக்கு இவை . . . . பெருமாள் . . .

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்		
அரசு :	பிற்காலப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	15
மன்னன் :	முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன்		

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகையின் தெற்குச்சுவர் உட்புறம்.

குறிப்புரை : முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் (கி.பி. 1216-1238) மெய்க்கீர்த்தியுடன் உள்ள இக்கல்வெட்டில் திசையறியும் பெருமாள் என்பவற்கு நிலம் கொடுத்த செய்தி உள்ளது. கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ பூமருவிய திருமடந் . . . நாமருவிய கலைமடந்தையும் . . . . கோளார்ந்த சினப்புலியும் கொடுங்கலியுங் குலைந்தொளிப்ப . . . (வ)ரி கயல்கள் விளையாட யிருங்கடல் வலய . . . னிதறம் பெருக . . . . கடிந்து செங்கோல் . . . கு குடைநிழல் இருநிலங்குளிர மூவகை தமிழு முறை . . .

2. ல்லவர் முதலிய பார்த்திவரெல்லாம் . . . . ஒருவர் முன்னொருவர் முறை முறை கடவ தம . . . திறைஞ்ச இலங்கொளி மணிமுடி யிந்திரன் பூட்டிய . . . . பனிமலர் தாமரை திசைமுகன் . . . கன்னிசூழ் நா . . .

3. .. .. முடியும் பொன்மணி ... தருள பாடற் சிறப்பில் பரிசி .. வளர்ந்து . . . ங்காசனத்து . . . . யிருந்து . . . தென்பறப்பு நாட்டு . . . திசை யறியும் பெருமாளுக்கு விலைப்பிர . . . .

5. மற்று மெப்பே . . . உண்ணில மொழிவின்றி இந்நில . யறியும் . . . . சிலால் . . . .

6 . . மையும் . . .

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13 - ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்		
அரசு :	பிற்காலப் பாண்டியர்		
அரசன் :	—	ஊர்க் கல்வெட்டு எண்	16

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகையின் தெற்குச்சுவர் உட்புறம்.

குறிப்புரை : பாண்டியன் மன்னனின் அண்ணன் (அண்ணாழ்வி) பெயரால் சிறப்பு வழிபாடு திருமறை நாயனார் கோயிலில் ஏற்படுத்தி இறையிலியாக நிலமளித்தை இக்கல்வெட்டு கூறுகிறது. இவ்வழிபாடு 'சேரனை வென்றான் சந்தி' என்று அழைக்கப்பட்டது. முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியனுக்கு (கி.பி. 1268) சேரனை வென்றான் என்ற பட்டப்பெயர் உண்டு.

கல்வெட்டு :

1. . . . . திருவாதவூருடையார் திருமறை தாயனார் கோயில் பதிபாத மூலபட்டுடை பஞ்சாசாரும் தேவகன்மிகளு. . .
2. பல்லவராயர்அண்ணாழ்வி திருநாமத்தால் கட்டினசந்திக்கும் சேரனை வென்றான் சந்தி . . . .
3. . . . . நாகமங்கலம் அம்மாகுடி சிற்றம்மாகுடி [அ]ரையாண்டார்குடி மதிராயகுடி சேமத்தராயகுடி காங்[க]*யப் பரைப்பள் . . .
4. . . . மலகுறிச்சிக்குள . . . களுக்கு எல்லை கீழெல்லை . . . . . வோ . . .

5. டக்கும் மேலெல்லை கோட்டை மழவெட்டி முகசுத்த . . , . . வெல்லை . . . மேனேரி எல்லைக்கு . . .

6. சந்திவிக்கிரகப் பேறும் தறியிறையும் செக்கிறை . . . தட்டார்பாட்டம் மற்றும் எப்பேறபட்ட அந்தராய ..

7. அச்சு நாற்பதும் வரியிலார் கணக்கிலும் கழித்து குடிநீங்கா தேவதான மாக இறையிலியாக குடுத்தோம் .. இவ் ..[1]

---

1. கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு:	21
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 1237
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	471/1962-63
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பிற்காலப்பாண்டியர்		
அரசன் :	முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன்	ஊர்க் கல்வெட்டு எண்	17

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகையின் தென்சுவர்.

குறிப்புரை : திருமறை நாயனார்க்கு அமுதுபடி, சாத்துப்படி திருமேற்பூச்சு, திருவிளக்கு, பயணிகளுக்கு உணவு அளித்தல் ஆகியவற்றுக்காகத் திருவாதவூர் குளத்து நீர்ப்பாசனத்தில் அமைந்த நிலங்களை இறையிலியாக அளித்ததை இக்கல்வெட்டு கூறுகிறது. மேலும் குழைஞ்சாள் அரசனான ஆலால சுத்தரநங்கை என்ற இக்கோயில் தேவரடியாள் இக்கோயிலில் சந்திரசேகர், கௌரி ஆகியோரது செப்புத்திருமேனிகளைச் செய்வித்து திருவீதி எழுந்தருளச் செய்தமையையும் கூறுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்தி ஸ்ரீ . . . . ஸகல ஶாஸ்வதழ வரழ கோமாற) பன்மரான திரிபுவன சக்கர வத்திகள் சோணாடு கொண்டு முடிகொண்ட சோழபுரத்து விஜையாபி ஷேகம் பண்ணியருளிய ஸுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு உ௰ வது எதிராமாண்டு தென்பறப்பு நாட்டு திருவாதவூர் குளம் [ஸபா]னக்கு
2. நீர்பாஞ்சு நெல்விளையும் [கண்ட] பூமியிலே இவர் [தேமாற்றசதி]ருக்க மூன்றும் தடிக இல் ரூப இந்நிலம் ஒரு மாவும் கொண்டு அமுதுபடி சாத்துப்படி திருமேற்பூச்சு திருவிளக்கு அங்கு வந்த திருப்பேற்கும் திருக்கை வழக்கத்துக்கும் அற்றைக்கு அழிய வேண்டுவன எல்லாத் துக்கும் மற்றை நம் நிமந்தங்களுக்கும் ஆசந்த்ராதித்தவரை செல்வதாக கல்லிலும் செம்பிலும் . . . .

3. ரக்ஷைடையான் பெரிய முதலியான தேவேந்த்ரவல்லபா...யெவ்வு உயகு ஜமத்ரய
நிஜூஷண த்ராண ஸம்ஹாரகாரணஞ் ஸ்ரீசது வாதவூரீஸ்வர ஸாஸனம் ஸாஸ்வதஞ்
பொழ நம் தாசிகளில் குழைஞ்சாள் அரசமாணி ஆலால சுந்தர நங்கைக்கு
தானிமக்குச் செய்தபடி நம்முடைய தண்டீசன் செய்தபடி செய்தான்
தான் செய்தபடி யாவன நம்முடைய திருநீற்றுத் தொண்ட

4. ன் தென்னகங்க தேவனுக்குச் சொல்ல [நாயனார்] வந்த்ரசேவர[மான]
. . . முனையதரையன் . . . . வீதியாக்கும்படி செய்வித்தமையாலும்
நம் வீதியிற் கிடந்த . . . டந்து நம் வீதி வரம்பும் செய்தமையாலும்
நம் பிள்ளை க்ஷேத்ரபாலன் ப்ரதிஷ்டை பண்ணுவித்தமையாலும் நமக்கும்
பலவூர்களுக்குஞ் சொல்லி திருநீற்றுத் தொண்டனு[க்கும்] சொல்லி
வீரபாண்டிய நல்லூர்க்கும் சேமம்

5. செய்வித்தமையாலும் நமக்கு . . . . யெறிந்து வீட்டை கலியாமலும்
மார்கழி ஆதிரையில் நமக்கு நம் வாதவூரன் கோ . . . . வை
வாதவூரன் கேட்பித்த நாள் முதல் நம்மை கேட்பிப்பான . . யிருக்க
அதுவும் நமக்கு செய்வித்தமையாலும் இவள் இப்படி செய்தபடியால்
நம்முடைய ஈா[ஸர்] நமக்குச் செய்ய கடவ உரிமைகளில் இ

6. .. டாகவும் குடுத்தோம் இப்படி கல்லிலும் செம்பிலும் வெட்டிக்
கொள் .. ளாகவும் குடுத்தோம் நம் கோவணவரும் இப்படிக்கு
தங்கள் சத்திமுகமும் [குடுக்க] இப்படி சிறப்பாக குடுத்த இம்முறை
இவளுக்கும் இவள் வற்கத்தாற்கும் இவள் வம்சத்தாற்கும் குடுத்தோம்
இப்படிக்கு திருவாய்மொழிந்தருள திருமந்திரவோலை எழுத்து . .
வாராயிர நாற்பத்தெண்ணாயிரபட்டன் எழுத்து இப்படிக்கு . . . . .

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	34
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	477/1962-63
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்		
அரசு :	பிற்காலப் பாண்டியர்		
மன்னன் :	—	ஊர்க் கல்வெட்டு எண்	18

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகையின் தென்சுவர்.

குறிப்புரை : திருமறைநாதசுவாமி கோயிலுக்கு இறையிலியாக நிலமளித்ததைத் தெரிவிக்கிறது. இச்செய்தி முந்தைய கல்வெட்டுகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. 'கோனேரின்மை கொண்டான்' என்ற பெயரில் அரச ஆணையாக இக்கல்வெட்டு உள்ளது. அரசாணை பல நிலைகளில் பல காலக்கட்டங்களில் நிறைவேற்றப்படுவதற்கு இக்கல்வெட்டு நல்ல எடுத்துக்காட்டாகும்

கல்வெட்டு :

1. [யம்பது]அரத்தூர் அச்சு நாலும் மேலைப்பள்ளிக் குறிச்சி அச்சு பத்தும் புளிங்குடி அச்சு பத்தும் . . .

2. ..பத்தொன்பதாவது ஆடி மாதம் முதல் தவிந்து வரியிலும் கழித்து இந்நாயனார்க்குத் தேவதானமாகத் தந்தோம் இப்படிக்கு இப்ப.....

3. [யனம்] பண்ணி சந்த்ராதித்தவற் செல்லக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொண்டு [சந்த்ரா]தித்தவற் இறையிலியாக அநுபவிக்க

4. மாவலி வாணாயிராயன் எழுத்து இவை காலிங்கராயன் எழுத்து [illegible]

5. ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனசக்கரவத்தி கோனேரின்மை கொண்டான் தென்பறப்பு நாட்டுத் திருவாதவூருடையார் திருமறை நாயனார் கோயில் தானத் தார்க்கு களவழி நாட்டுத் க..தேரிப்பற்றில் பாண்..ய்யராயன் கொண்டுடைய

6. ... இவனுக்குக் காராண்மையும் அந்தராயமும் இந்நாயனார்க்குத் தேவதானமாவதாகவும் முப்பத்து நாலாவது ஆனி மாதம் முதல் குடுத்தோம் இவ்வூற்கு கடமை அந்தராயம் [பொன்] வரி தறிஇறை செக்கிறை

7. தட்டொலி தட்டார் பாட்ட மனைத்தந்தராயங்களும் உட்பட இறுப்பதாக அச்சு ஒன்று இவ்வச்சு ஒன்றும் நாயனாற்கு அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்ட நித்த நிமந்தங்களுக்கு உடலாகத் தந்து வரியிலும் கழிக்கச் சொன்னோம் இப்படிக்கு

8. இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு சந்திராதித்தவற் செல்ல கல்லிலும் செம்பிலும் வெட்டிவித்து நான்கெல்லையிலும் திருச்சூலஸ்தாபனம் பண்ணிக் கொள்க இவை துஞ்சலூருடையான் எழுத்து இவை ... வராயன் எழுத்து

9. யாண்டு [௲௱௪௰௫] துஞூழ உ

10. [ஸ்வஸ்தி ஸ்ரீ] திரிபுவனசக்கரவத்தி கோனேரின்மை கொண்டான் களவழி நாட்டுப் படைக் காரணவற்கு தங்கள் பற்றில் .. கலாதேரியில் தங்கள் பக்கல் கொண்டு ...

11. தேவதானமாக ... ஆனி மாதம் முதல் குடுத்த இவ்வூர் கடமை அந்தராயம் பொன் வரி தறியிறை செக்கிறை தட்டொலி தட்டார் பாட்டம்

12. அச்சு ஒன்றும் இவ்வச்சு ஒன்றும் இன்னாயனாற்கு அமுதுபடி சாத்துப் படி உள்ளிட்ட நித்தநிமந்தங்களுக்கு உடலாக தந்(த)து வரியிலும் கழிக்கச் சொன்னோம் இப்படிக்கு ... இப்படி

13. [கண]க்கிலும் வரியிலும் கழித்து சந்திராதித்தவற் செல்ல கல்லிலும் செம்பிலும் வெட்டி திருசூல ஸ்தாபனம் பண்ணிக் கொள்க இவை துஞ்ச லூருடையான் எழுத்து யாண்டு ௲௰௪ வது ௲௱௪௰௫ .....

14. ஸ்வஸ்திஸ்ரீ யாண்டு ௯௰௪வது எதிராமாண்டு ஆடி மாதம் ௫ உடையார் திருமறை நாயனார் ஆதிசண்டேஸ்ரர்க்கு தென்களவழி நாட்டு .... தேரியில் .....

15. பண்டுடைய சிறுகுளமான வேதநாயக நல்லூர் அளந்து கண்ட .... னாயன் கையில் சாதனப்படி . . .

16. நான்கெல்லை . . . , ச்சயபடி அச்சு ஒன்றும் அந்தராயம் உபாதியும் வினி யோகம் . . . ந்தராயரும் உலகுடைய [நாயனார்] ..க் கருளிய

17. ஊர்க்குச் சமைந்த ஊரோ ... எழுத்து இந்நாயனார் கோயிற் சிற்பா சாரியன் . . .

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்		
அரசு :	பிற்காலப் பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	19
மன்னன் :	—		

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகை தென்சுவர் உட்புறம்.

குறிப்புரை : திருவாதவூர் திருமறைநாயனார் கோயிலுக்கு உலகளந்த சோழபுரம், திருமறை நாயக நல்லூர் முதலிய ஊர்களிலிருந்து பலர் சேர்ந்து இறையிலி நிலமளித்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது தென்னகங்கதேவன் என்பவன் அரசனிடம் எடுத்துச் சொல்லி மக்களின் காராண்மை உரிமை பாதிக்கப்படாமல் இத்தானத்தைப் பெற்றுள்ளான்.

கல்வெட்டு :

1. கோனேரின்மை மேல் கொண்டான் தென்பறப்பு நாட்டுத் திருவாதவூர் உடையார் திருமறைநாயனார் கோயிலில் தேவர் கன்மிகளும் ஸ்ரீ மாஹேஶ்வரக் கண்காணி செய்வார்களும் . . . .

2. . . . . . ஈரச் சோழ சதுர்வேதி மங்கலத்தில் மேல் பிடாகை உலகளந்த சோழபுரப்[பேரேரிக்] . . குளக்கீழ் மாதேவன் அழகியான் உள்ளிட்டார் நிலங்களும் கோ[வள] திரு

3. . . . குடிநாதனாதிச்சனுள்ளிட்டார் நிலங்களும் சீராமன் மாதேவனு ள்ளிட்டார் நிலங்களும் . . குளவிலையும் ஸபைவிலையுமாக ஆலி கோன்மை சித்தசண்டான் விலைகொண்ட நிலங்களும் தன் . . .

4. . . . . நில[மு]ம் இந்நாயனார் திருனாமத்தால் தேவன்பட்டனான விக்கிரமபாண்டிய பிரமராயனும் தேவன் காங்கேயனும் இவ்வூர் பிராமணர் பக்கல் திருமறைநாயனார் சிவனாமத்தால் தங்களுக்கு காராண் . . .

5. நிலம் முக்காலும் நத்தமும் மற்றும் இவ்வூரில் குடிப்பற்று உள்ள வையும் ஊர் முற்றும் நல்லணி ஆமூர் சுந்தரத்தோளன் திருப்பூவண முடையான் செம்பியன் பல்லவரையன் ஸபையார் பக்கல் வி . . . ;

6. குடியான செம்பியன் நல்லூரும் மேல்படியான் உள்ளிட்டார் விலை கொண்ட குறிஞ்சிலிக் குடியான திருமறைநாயகனல்லூரும் தாமோதர னக்கபிரான் பட்டன் பக்கல் த . . . . வந்தான் குழைஞ்ச . .

7. . . . . தேவநல்லூரும் நெரிஞ்சியான அழகியபிள்ளை[ப் புறத்து] அரசு பல்லவனான சேநாவரையன் இன்னாயனார் சிவனாமத்தால் விலை கொண்ட வேலங்குடி யெந்[ற]

8. தேவகள் தேவநல்லூரும் கூறியூர்ச் செட்டி இந்நாயனார் சிவனாமத்தால் விலைகொண்ட முடவனேம்பலான [முட]தேவியார் . . . நல்லூரும் மேல் குறிச்சியும் நாயனார் திருமறைநாயனார்க்கு அந்தராயம் . . . .

9. இறையிலி தேவதானமாகவும் குடிமக்களுக்கு காராண்மை பெற வேணுமென்று பட்டன் தென்னகங்கதேவன் நமக்குச் சொன்னமையில் இராஜேந்த்ர சோழ சதுர்வேதி மங்கலத்து முதலியார் . . .

10. தேவதானம் உட்பட அந்தராயம் கடமை இந்நாயனார் திருமறை நாயனார்க்கு குடுத்தோம் . . . . யாண்டு ௫ வது நெதிராமாண்டு முதல் ராஜேந்த்ர சோழ சதுர்வேதி மங்கலத் . . .

11. ல் காசும் கொள்க வென்று நம்மோலைப்படியும் நம்கேழ்விப்படியும் . . நாம் [திருவாய் மொழிந்தபடியும்] கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க என்று திருவாய்மொழி

12. . . . [டே]வந்த வேளான் எழுத்து நாள் அஞ்நூற்றிருபத்தொன்பதினால் திருவாய்மொழி[ந்தருள எழுதினேன்] செம்பிநாட்டு மேலைக்கொடுமளு ரான உத்தமபாண்டிய . . . .

---

* கல்வெட்டு முற்றுப்பெறவில்லை.

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன்பதிப்பு :	—
அரசு :	பிற்காலப்பாண்டியர்		
மன்னன் :	முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்	ஊர்க் கல்வெட்டு எண்	20

இடம் : திருமறைநாதசுவாமி கோயில் திருச்சுற்று மாளிகை தென்சுவர் உட்புறம்.

குறிப்புரை : துண்டுக் கல்வெட்டுகள். இறையிலி தானம் பற்றிக் கூறுகின்றன. மன்னனின் மெய்க்கீர்த்தியும், பெயரும், வடகளவழிநாடு எனும் பெயரும் காணப்படுகின்றன.

கல்வெட்டு :

1. வாளுவர் சிங்களர் தெலிங்கர் வில்லவர் மாகதர் விக்கலர் . . . .
2. தொழுது வத்தடை[யா]* நிருபரின் கோதையர் அழுத கண்ணீராறு பரப்பி கழுதை . ந்த . . . யான் கொ...
3. கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவற்கு ரு றாவது வடகளவழி நாட்டு . . . .
4. வரம்புக்கு மேற்கும் ஆக இவ்விசைந்த பெருநான்கெல் .. ஆக இறையிலி யாய் இறுப்ப . . .
5. த்தொன்று இறுப்பாராகவும் .. வதாகவும் கல்லிலும் செம்பிலும்....
6. ... ராயன் எழுத்து இப்படிக்கு இவை . . .

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13 - ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவாதவூர்		
மொழி :	தமிழ்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	—
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	—		
மன்னன் :	—	ஊர்க் கல்வெட்டு எண்	21

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகை மேற்குச் சுவர் உட்புறம்.

குறிப்புரை : மேற்குத் திருச்சுற்றுமாளிகையில் பெரியபுராணத்தில் கூறப்பட்ட 63 அடியார் மற்றும் தொகையடியார்களுக்குத் தனிச்சன்னிதி பிற்காலப்பாண்டியர் காலத்தில் இருந்துள்ளது. இதில் இருந்த அடியார்கள் சிற்பங்களுக்கு மேலே சுவரில் அவர்களின் பெயர்களைப் பொறித்துள்ளனர். நாளடைவில் சிற்பங்கள் அகற்றப் பட்டுவிட்டன. கல்வெட்டுகள் மட்டும் எஞ்சியுள்ளன. அவை வரிசையாக இங்கு தரப்படுகின்றன. கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்குடி வட்டம் கீழைக்கடம்பூர் உருத்திராபதி ஈஸ்வரர் கோயிலிலும் சில சைவ அடியார்களின் பெயர்கள் தற்போதுள்ளன. தாராசுரத்தில் நாயன்மார்களின் சுதைச் சிற்பங்களும் கல்வெட்டு களும் உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

கல்வெட்டு :

1. எறிபத்த
நாயனார்
2. ஏனாதி
நாயனார்
3. கண்ணப்ப
நாயனார்
4. குங்குலிய
நாயனார்
5. மானக்கஞ்சாற
நாயனார்
6. அரிவாட்டாயி
னாயனார்

7. ஆனாயனார்

8. திருமூத்தி
நாயனார்

9. முருகனா
யினார்

10. உருத்திரபசுப
தி நாயனார்

11. திருநாளை
ப்போவார்

12. திருக்குறிப்பு
த்தொண்டர்

13. சண்டேசுர
நாயனார்

14. குலைச்சிறை
நாயனார்

15. பெருமிழலை
க்குறும்பனார்

16. காரைக்கா
லம்மை

17. அப்பூதி
நாயனார்

18. நீலிரக்க
நாயனார்

19. நமினந்தி
நாயனார்

20. ஏயகோ
நாயனார்

21. திருமூல
நாயனார்

22. கண்டிய
னாயனார்

23. மூற்கநா
யனார்

24. சோமாசி
நாயனார்

25. சாக்கிய
நாயனார்

26. சிறப்புலி
நாயனார்

27. சிறுத்தொ
ண்ட நாயனார்

28. சேரமானா
யனார்

29. திருநாவுக்கர
சு நாயனார்

30. பிள்ளையா
நாயனார்

31. சுந்தர
நாயினார்

32. கணநாத
நாயனார்

33. களந்தைக்
கோன் நாயனார்

34. யியற்புகை
நாயனார்

35. புகட்சோ
ழ னா[யனார்]

36. நரசிங்க
முனையரைய
[நா]யனார்

37. அதிபத்த
நாயனார்

38. கலிக்கம்ப
னாயனார்

39. கலிய
நாயனார்

40. சத்தி நாயனார்

41. காடவர்கோ
நாயனார்

42. கணம்புல்ல
நாயனார்

43. காரி நா
யனார்

44. நின்றசீர் நெ
டுமாற நாயனார்

45. வாயிலா
நாயனார்

46. முனையடுவா
நாயனார்

47. கழச்சிங்க
நாயனார்

48. இடங்கழி
நாயினார்

49. செரு[துணை]

50. புகழ்துணை
நாயனார்

51. கோள்பு
லி நாயனார்

52. பத்தராய் பணிவார்

53. பரமனை
யே பாடுவார்

54. [சித்தத்தைச் சிவன் பாலே]
வைத்தார்

55. திருவாரூர்
பிறந்தார்

56. முப்பொழு
தும் திருமேனி
தீண்டுவார்

57. முழுனீறுபூ
சிய முனிவர்

58. அப்பாலும்
அடிசார்ந்தார்

59. . . .

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	490/1962-63
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பிற்காலப் பாண்டியர்		
மன்னன்	—	ஊர்க் கல்வெட்டு எண்	22

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகை கிழக்குச்சுவர் உட்புறம்.

குறிப்புரை : திருமறைநாயனார்க்கு வேலங்குடியான தேவர்கள் தேவநல்லூரில் இறையிலியாக நிலம் அளிக்கப்பட்டதை இக்கல்வெட்டு கூறுகிறது. இராசேந்திரச் சோழ சதுர்வேதி மங்கலத்துச் சபையாரிடமிருந்து இந்நிலம் பெறப்பட்டிருக்கலாம். கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1. [ஸ்வஸ்தி] கோநேரின்மை கொண்டான் தெந்பறப்பு நாட்டு திருவாதவூர் உடையார் திருமறை நாயனார் கோ . . .
2. களுக்கு தென்பறப்பு நாட்டு ஸ்ரீஇராஜேந்திர ராஜேந்த்ர சோழச் சதுர்வேதி மங்கலத்து ஸபையார் பக்கல்
3. . . . வேலங்குடியான தேவர்கள் தேவநல்லூர் . . .
4. . . . து செய்யக்காட்டி . . . குறுணிக்கும் கறியமுது விஞ்சனத்துக்கும் சபை கணக்கன் . . . .
5. . . னும் இம்முதல் வா[சல்] கூற்றிலக்கை கடை கூட்டிலக்கை வெட்டி பாட்டந் தறியிறை செக்கிறை கூ . . . .

6. வினியோகம் வாசற்பேறிலாஞ்சினைப்பேறு . . . ஏர்வரி யினவரி இடைவரி மனைவரி [கார்த்திகை]

7. . . பணம் . . கை[கொ]ண்டு வரியிலார் கணக்கிலும் நாட்டுக் கணக்கிலும் ஊர்க் கணக்கிலும் கழிக்க . . .

8. . . . தந்தோம் இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு சந்திராதித்தவற் செல் . . .

9. . . . ணரு . . கடமை ஆசுவிகம் பொன்வரி வினியோகம் மற்றுமெப்பேற் பட்ட

10. . . . கச் சொன்னோ . . . [இ]வை குச்சைகேனி மலையுடையான் எழுத்து . . .

11. ஶாதக த்ரைலோக்ய நிஸ்தாரண்ய . . ஸம்ஹார காரண: ஸ்ரீ . . . . .

மாவட்டம் : மதுரை
வட்டம் : மேலூர்
ஊர் : திருவாதவூர்
மொழி : தமிழ்
எழுத்து : தமிழ்
அரசு : பிற்காலப் பாண்டியர்
மன்னன் : குலசேகரன்

ஆட்சி ஆண்டு : —
வரலாற்று ஆண்டு : கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை : 484/1962-63
முன் பதிப்பு : —
ஊர்க் கல்வெட்டு எண் : 23

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகை கிழக்குச்சுவர் உட்புறம்.

குறிப்புரை : திருவாதவூர் குலசேகர வேதப் பெருமாளுக்கு குளவிலைப் பிரமாணம் செய்து கொடுத்ததை இக்கல்வெட்டு கூறுகிறது. கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது.

கல்வெட்டு :

1. [மெய்க்கீர்த்திக்கு] மேல் ஸ்ரீ கோமாறபன்மரான த்ரிபுவனசக்கர வத்திகள் எம்மண்ட . . . . . .

2. . . . . இத்திருவாதவூ[ர்]க் குலசேகர வேதப் பெருமாளுக்கு மாடக்குளக் கீழ் . . . .

3. . . . குளவிலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது கங்கதேவ னான . . . .

4. .. ட்டகுடிக்கும் யுற்பட்ட குடிக்கும் . . .

5. . . . க்கு வடக்கு இவ்வெல்லை . . . . இக் . . . .

6. . . ன் செய் . . . . ங்காலுக்கு குடு . . .

7. குளங்களால் வந்த . . . .

8. . . . . இறுப். . . ஹுபவித்து கய்யில் பற்றின . . .

9. . . . குடுத்த குளங்களுக்கு . . . . பிடிபாட்டின்படி . . . .

10. . . குடுத்தோம் குலைசேகர . . கொண்டாரும் அஞ்சாத பெருமாளுக்கும்

11. தற்குறிக்கும் . . . தற்குறிக்கும் . . . அஞ்சாத பெருமாள் . . . . இப்படி சொல்ல இப்பிடிபாடு . . . . எழுதினேன் தென்பறப்புநாட்டு திருவாதவூர் அழகிய பிள்ளை எழுத்து

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13 - ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	488/1962-63
மொழி :	தமிழ்	முன் பதிப்பு :	—
எழுத்து :	தமிழ்	ஊர்க் கல்வெட்டு எண்	24
அரசு :	பிற்காலப் பாண்டியர்		
மன்னன் :	—		

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகை கிழக்குச்சுவர் உட்புறம்.

குறிப்புரை : இறையிலி தானத்தைக் குறிப்பிடுகின்றது. நிலங்களின் தரம், பயிர்வாரியான வரிவிதிப்பு ஆகியவை கூறப்பட்டுள்ளன.

கல்வெட்டு :

அ) 1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனசக்கரவத்திகள் கோனேரின்மை கொண்டான் திருவாதவூர் உடையார் திருமறை நாய ...

2. தேவகன்மிகளுக்கும் இ நாயனார்க்கு[ம்] வடபறப்பு நாட்டு . . . குலசேகர வாணாதிரா ....

3. இராசேந்திர சோழ சதுவ்வெ-திமங்கலத்து ஸபையார் ....

4. பொய்யிலும் இவ்வூர்க்கு . . . கள் நிலங்களும் உட்பட

5. வினியோகம் பொன்வரி வினியோகம் தறியிறை தட்டொலி . .. தட்டா பாட்டம்

6. . . . த்து காணி உடையாரும் பழந்தேவதானமு திருவிடையாட்டமு

7. தம்மக்களுக்கும் காராண்மையும் நாயனார்க் கடமையும் ஆக . . . .

8. . . . கழித்து ஒன்று முக்காலாக வந்த நிலம் ஒரு மாவுக்கும் மாத்தால் பண

9. ரைக்கால் கொள்வதாக ஆடிக்குறுவை விளைந்த நிலத்துக்கு

10. க்கு ஒன்று காலும் இறுப்பதாகச் சொன்னோம் இப்படி

11. சூலத்தாபனம் பண்ணிக் கொள்க இவை

ஆ) 1. சு . . . வூர் . . . குமக்கல் சொல்லுகையில் தன்

2. த்து . . . னம் இன . . .

3. கும் . . . இப்படிக்கு இவ்வெ . . .

4. இவர் கொடுத்த அருள

5. .. ..

6. .. .. எழுத்து இவை .. ..

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு :	—
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13 – ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவாதவூர்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	486 / 1962-63
மொழி :	தமிழ்		
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பிற்காலப்பாண்டியர்	ஊர்க் கல்வெட்டு எண்	25
மன்னன் :	—		

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்று மாளிகையின் கிழக்குச்சுவர் உட்புறம்.

குறிப்புரை : கல்வெட்டு மிகவும் சிதைந்துள்ளது, செங்குளமான நாற்பத்தெண்ணாயிர நல்லூர் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.

கல்வெட்டு :

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸ்ரீமக்கீர்த்திக்கு மேல் கோமாறபன்மரான த்ரிபுவநசக்கர . . .
2. [செ]ங்குளமான நாற்பத்தெண்ணாயிர நல்லூர் . . .
3. . . . திருமு[ன்பு] அழகியானுக்கு பாண் . . .
4. . . . ண்டி . . .
5. . . . .

மாவட்டம் :	மதுரை	ஆட்சி ஆண்டு:	—
வட்டம் :	மேலூர்	வரலாற்று ஆண்டு :	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
ஊர் :	திருவாதவூர்		
மொழி :	தமிழ்	இந்தியக் கல்வெட்டு ஆண்டு அறிக்கை	492/1962-63
எழுத்து :	தமிழ்	முன் பதிப்பு :	—
அரசு :	பிற்காலப்பாண்டியர்		
மன்னன் :	—	ஊர்க் கல்வெட்டு எண்	26

இடம் : திருமறைநாதசுவாமி திருக்கோயில், திருச்சுற்றுமாளிகை, கிழக்குச்சுவர் உட்புறம்.

குறிப்புரை : திருமறை நாயனார்க்கு நாற்பத்தெண்ணாயிரநல்லூர் போன்ற சில ஊர்களிலிருந்து நிலங்களை விலைக்குக் கொண்டு இறையிலியாகக் கொடை அளித்ததைக் கல்வெட்டு கூறுகிறது. நாற்பத்தெண்ணாயிரநல்லூர், வாகைக்குடி, முதலிய ஊர்களும் இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றன.

கல்வெட்டு :

1. .. .. கோனேரின்மை கொண்டான் தென்பறப்பு நாட்டு திருவாதவூர் உடை
2. . . . . . இப்படி . . . . காயஞ் செய்வார் தேவகன்மி . . .
3. வரர் மகன் மக்கணாயன் ஊரவர் பக்கல் விலை கொண்டுடைய
4. . . . நல்லூரும் நெடுங்குளத்துக்கு சேவிப்பான் பொன் உம் முதல் வ
5. த . . . தறியிறை செக்கிறை தட்டொலி தட்டார்பாட்டம் பஞ்சு பீலி சந்து விகூகப் பேறு
6. . . . பேறு ஏர் வரி இனவ்ரி இடைவரி காணிக்கை கார்த்திகை பச் . . . . . முதல் வரியிலார் கணக்கிலும் கழித்து

7\. . . . இந்நாயனார்க்கு வாகைக்குடி . . . .

